**கவனிக்க.-** *2021.10.08 ஆந் திகதிய 2249 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2250 - 2021 ඔක්තෝබර් මස 15 වැනි සිකුරාදා - 2021.10.15**

*2250 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 932 |


**கவனிக்க.-** (i) அக்குறணை பைதுஸ் ஸகாத் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) ஒதுக்கீடு சட்டமூலம் 2021, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2021, நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/67858.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : என்சிபி/பிஎல்சி/ எல்7/10/04/02/தீகாப .

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், கிழக்கு நுவரகம் பலாத பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல.277 நெலும்குளம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த குடாகலத்தேவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள காணி அலுவலரினால் வரையப்பட்ட சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 5280 இல் இல. 01 எனக் காட்டப்பட்டுள்ள 0.1872 ஏக்கர் விஸ்தீரணமுள்ள அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்கு தருமாறு கேட்டு திரு. ஹேரத் முதியன்சேலாகே உதித பிரியசான்த பண்டார ஹிந்தகல என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : அரச காணி ;
கிழக்கு : 15 அடிஅகல வீதி ;
தெற்கு : பாதை ( பி.ச.) ;
மேற்கு : வி. ஜ.சிறிபாலவின் காணி.

03. குறித்த காணி குத்தகைக்குத் வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணி குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.-** முப்பது (30) வருடங்கள் (2021.08.05 ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள் முன்னோக்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளது) ;

**வருடாந்தக் குத்தகை.-** 2021 ஆம் ஆண்டில் காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு ( ரூ. 5, 000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியில் 2% ஆகும். 2021 ஆம் ஆண்டுக்கான விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூ.5, 000,000) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் 2021 ஆம் ஆண்டுக்கான பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபட வேண்டும். இந்தக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்படும் குத்தகைப் பணத்தின் 20% வட்டி வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) தவணைப்பணம்.- தவணைப் பணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மாகாணக்காணி ஆணையாளர் / பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக கருத்திட்ட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) பிரதேசச் செயலாளர் மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். ;

(எ) 2021.098.05 ஆந் திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவுசெய்கின்ற கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் மட்டுமே அனுமதிக்கப்படும்.;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.;

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

எ.கே. எ. செவ்வந்தி அமரசேகர,
உதவி காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்கு பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
''மிஹிகத மெதுர''.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, ஓகத்து 20.

10-171

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/66833.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. UPLC/ L/07/SG/L/27
.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மொனராகலை மாவட்டத்தின் செவனகல பிரதேச செயலாளர் பிரிவுக்குச் சொந்தமான 149 ஜீ2, புஞ்சிவெவ கிராம அலுவலர் பிரிவின் , புஞ்சிவெவ கிராமத்தில் அமைந்துள்ள இலக்கம் MO/ SEV/ LND/ LR/15 ஐ உடைய ஜனபத அலுவலரினால் வரையப் பட்ட மாதிரி தள வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவில் சுமார் 15 ஏக்கர் வரையான அரசாங்க காணித்துண்டு ஒன்றிலே சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையக் கருத்திட்டம் ஒன்றினை நடாத்திச் செல்வதற்காக வணிக அடிப்படையில் ஆர். ஆர். இன்டர்நெஷனல் இன்வெஸ்ட்மன்ட் ஹோல்டிங்ஸ் ( பிரைவட்) லிமிடட் நிறுவனத்தினால் குத்தகைக்குக் கோரப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : அரசாங்க காணி ;
கிழக்கு : அரசாங்க காணி ;
தெற்கு : நுழைவுப் பாதைக்கான ஒதுக்குப் பிரதேசம்;
மேற்கு : நுழைவுப் பாதைக்கான ஒதுக்குப் பிரதேசம் மற்றும் அரசாங்கக் காணி.

03. கோரியுள்ள காணியை உரிய தேவைக்காக குத்தகைக்கு வழங்க முடியும். எனவே அரசாங்கத்தின் அனுமதிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்படுத்தி காணியை குத்தகைக்கு விடுமாறு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (கௌரவ அமைச்சர் குத்தகை அனுமதித்த 2021.08.06ஆந் திகதி முதல்) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2021ஆம் ஆண்டில் காணி விலை மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ( ரூ.5, 000, 000) ரூபாவை விடவும் குறையும் சந்தர்ப்பங்களின் போது பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டின் பிர காரம் அந்த ஆண்டில் காணியின் அபிவிருத்தியடையாத பெறுமதியில் 2% ஆகும். 2021 ஆம் ஆண்டிலே காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் (ரூ.5,000,000) ரூபாவை விடவும் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களின் போது பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டின் மீது அந்த காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகை தொகையினை ஒவ்வொரு 05 வருடத்தின் இறுதியில் அறவிட்ட வருடாந்த குத்தகை தொகையுடன் 20 % சேர்க்கப்பட வேண்டும்.

(ஆ) தவணைப்பணம்.- தவணைத் தொகையொன்று அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்குப் பெறுபவரினால் குத்தகை ஆரம்பிக்கும் தினத்திலிருந்து 01 வருட காலத்தினுள் பிரதேச செயலாளரின் மனதைக் கவரக்கூடியவாறு இக்காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்.;

(ஈ) குத்தகை பெறுபவரினால் இக்காணியை சூரிய சக்தி மின் உற்பத்தி கருத்திட்டத்திற்காக அன்றி வேறு எப்பணிக்கும் பயன்படுத்தலாகாது;

(உ) பிரதேசச் செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இக்குத்தகை உட்படல் வேண்டும்.

(ஊ) அமைந்துள்ள, அமைந்த கட்டிடங்கள் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்து பேணி வருதல் வேண்டும். ;

(எ) காணி குத்தகைக்கு விடப்பட்டுள்ள போது குத்தகையாளரினால் காணியைப் பெற்றுக்கொண்ட நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு உத்தேசிக்கும் காலப்பகுதியினுள் முடியாது போகும் பட்சத்தில் குத்தகையினை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) கௌரவ அமைச்சர் அவர்கள் குத்தகையினை அனுமதித்த தினத்திலிருந்து 05 வருடங்கள் முடியும் வரையில் இடைக்கால குத்தகைக்கு விடல் அல்லது உரிமை மாற்றல் என்பவற்றிற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.;

(ஐ) குத்தகைக் கூலியினை இடைவிடாது செலுத்துதல் வேண்டும். குத்தகையைச் செலுத்த தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் சுயமாக இரத்தாகும்.

04. இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து 06 வாரங்களுக்குள் குறித்த காணியை குத்தகைக்கு விடக்கூடாதென ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்களை சுட்டிக்காட்டி எனக்கு அறிவிக்காதவிடத்து கோரிக்கைக்கேற்ப குத்தகைக்கு வழங்கப்படும்.

ஏ.கே. என். செவ்வந்தி அமரசேகர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்கு பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, ஒற்றோபர் 15.

10-409

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.